

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 40 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – புரட்டாசி 02 – சனிக்கிழமை 19 செப்டம்பர் 2026 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 40 : Thiruvalluvar Year - 2057 - Purattasi 02 - Saturday 19 September 2026 - Chennai 12 Pages ₹ 5.00


## சென்னை - அண்ணா அறிவாலயம் - ‘கலைஞர் அரங்கில்’ இன்று எழுச்சியோடு நடைபெறுகிறது!

# ‘தி.மு.க. முப்பெரும் விழா’ - விருதுகள்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கிச் சிறப்புரையாற்றுகிறார்!

**சென்னை, செப். 19 -**

**“தி.மு.க. முப்பெரும் விழா” சென்னை - அண்ணா அறிவாலயம் - கலைஞர் அரங்கில் இன்று பிரம்மாண்டமாக நடைபெறுகிறது. இவ்விழாவிற்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று விருதுகள் மற்றும் பரிசுகள் வழங்கிச் சிறப்புரையாற்றுகிறார்.**



தமிழ்நாட்டின் முதல்வராக அரியணை ஏறிய குறுகிய காலத்திற்குள், சென்னை மாநிலத்துக்குத் “தமிழ்நாடு” என்ற பெயர் மாற்றம்; சுய மரியாதைத் திருமணத்திற்குச் சட்ட அங்கீகாரம்; மும்மொழித் திட்டத்தை அகற்றிவிட்டு, தமிழ் - ஆங்கிலம் மட்டும் என்ற இருமொழித் திட்டம்; ஆகிய மூன்று முத்தான சாதனைகளை நிகழ்த்திக் காட்டிய பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் செப்டம்பர் 15.

இன்றைக்கு நாம், ஆறறிவின் பயனறிந்த மனிதர்களாக, வெண்ணெய்க்கும் சுண்ணாம்புக்கும் வேறுபாடு காணும், பொது அறிவுள்ளவர்களாக, எதிலும் “ஏன், எப்படி, எப்போது, எதற்கு” என்று கேள்வி மேல் கேள்வி தொடுத்து, அடிப்படை உண்மையைத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுபவர்களாக நடமாடுவதற்குக் காரணம், தந்தை பெரியார் அவர்களும், அவரால் உருவாக்கப்பட்ட அறிவுச்சுடர்களின் பகுத்தறிவுப் பரப்புரையே!

“இத்தனை ஆண்டுகளிலும், நான் அறிந்த தலைவர், தெரிந்த தலைவர், பார்த்த தலைவர்; நான் கண்ட தலைவர், கொண்ட தலைவர், பெரியார் ஒருவர்தான். வேறு தலைவரின் தலைமையில் நான் வேலை செய்தது கிடையாது; அவர், நம் இதயத்திலே நிறைந்த, இதயபூர்வமான தலைவர் ! நமக்கெல்லாம் வழி காட்டியவர் பெரியார்!” என்று பேரறிஞர் அண்ணா அவர்களாலும்

**“பாராட்டிப் போற்றி வந்த பழமை லோகம்,**

**ஈரோட்டுப் பூகம்பத்தால் இடியுது பார் !”**

என்று தலைவர் கலைஞர் அவர்களாலும் போற்றப்பட்ட தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாள் செப்டம்பர் 17.

திராவிடர் கழகத்திலிருந்து - தந்தை பெரியாரிடமிருந்து பிரிந்து சென்னை - ராயபுரம் ராபின்சன் பூங்காவில் கொட்டும் மழையில், “திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிவிட்டது. திராவிடர் கழகத்திற்குப் போட்டியாக அல்ல. திராவிடர் கழகத்தின் அடிப்படைக் கொள்கைகளின் மீதேதான் திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது” என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் அறிவிக்கப்பட்டு “திராவிட முன்னேற்றக் கழகம்” எனும் மாபெரும் இயக்கம் துவக்கப்பட்ட நாள் செப்டம்பர் 17.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், காஞ்சி தந்த வள்ளுவன் பேரறிஞர் அண்ணா ஆகியோர் பிறந்த நாளையும் தமிழினத்தின் விடிவெள்ளியாக உதித்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொடக்க நாளையும் இணைத்து “கழக முப்பெரும் விழா”வாக கொண்டாட வேண்டும் என்று 1985ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்தார். அன்று முதல் இன்று வரை தொடர்ந்து நாம் இந்த விழாவை ஒவ்வொரு ஆண்டும் நடத்திக்கொண்டு வருகிறோம்.

**இந்த ஆண்டுக்கான 2026 தி.மு.க முப்பெரும் விழா - இன்று (19.09.2026 - சனிக்கிழமை) மாலை 5 மணியளவில் சென்னை அண்ணா அறிவாலயம் - கலைஞர் அரங்கத்தில் நடைபெறுகிறது என்று தி.மு.க. தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.**

**விழாவில் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு வரவேற்புரையாற்றுகிறார்.**

**கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் தலைமை வகிக்கிறார்.**

**கழக விருதுக்காக தமிழகத்தில் உள்ள நான்கு மண்டலங்களில் ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் ஆகியவற்றில் கழகப் பணியில் சிறப்பாக செயல்படும் தலா ஒருவருக்கு நற்சான்று, பணமுடிப்பு வழங்கப்படுகிறது.**

**விழாவில் விருது மற்றும் பரிசுகள் வழங்கி கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்.**

**கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளர் கே.என். நேரு, துணைப் பொதுச் செயலாளர்கள் ஐ.பெரியசாமி, க.பொன்முடி, கனிமொழி கருணாநிதி, திருச்சி என். சிவா, ஆ.இராசா, அந்தியூர் ப.செல்வராஜ், மு.பெ.சாமிநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.**

**இவ்விழாவில் பெரியார் விருது - கு.செல்லப்பாவுக்கும்**

**அண்ணா விருது - ஜி.கே.சுபாஷ்க்கும்**

**கலைஞர் விருது - திருச்சி சிவா எம்.பி.க்கும்**

**பாவேந்தர் பாரதிதாசன் விருது - கனிமொழி என்.வி.என்.சோமுவுக்கும்**

**பேராசிரியர் விருது - மிசா எஸ். அகமது தம்பிக்கும்**

**மு.க.ஸ்டாலின் விருது - நா. இளைய ராஜாவுக்கும் வழங்கப்படுகிறது.**

**முரசொலி அறக்கட்டளை சார்பில் “முரசொலி செல்வம் விருது” ஊடகவியலாளரும் எழுத்தாளருமான ப.திருமாவேலனுக்கு வழங்கப்படுகிறது.**

இம்முப்பெரும் விழாவில் கழக முன்னணியினர், முன்னாள் அமைச்சர்கள், சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

---

### த.வெ.க. ஆட்சியின் நிர்வாகச் சீர்கேட்டால்

## தேசிய சராசரியை மிஞ்சியது தமிழ்நாட்டின் விலைவாசி உயர்வு !

### அன்றாடச் செலவுகளுக்கே ஏழை, எளிய மக்கள் திண்டாட்டம்!

*சென்னை, செப்.19-*

*த.வெ.க. ஆட்சியில் விலைவாசி உயர்வால் பணவீக்கத்தில், தேசிய சராசரியை தமிழ்நாடு மிஞ்சியுள்ளது. கடந்த ஜனவரி மாதம் 3.36 சதவீதமாக இருந்த பணவீக்கம், ஆகஸ்டில் 5 .92 சதவீதமாக உயர்ந்துள்ளது. அன்றாட செலவுக்கே கடும் இன்னல்களை சந்திக்கும் நிலைக்கு ஏழை, எளிய மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.*

*த.வெ.க ஆட்சி பொறுப்பேற்ற நாள் முதல், அதன் நிர்வாகச் சீர்கேட்டால், ஒவ்வொரு மாதமும் தமிழ்நாட்டின் பணவீக்கம் ராக்கெட் வேகத்தில் எகிறுகிறது.. அரிசி, பருப்பு, எண்ணெய், காய்கறி என அத்தியாவசியப் பொருட்களின் விலை விண்ணை முட்டுகிறது.*

**விஜய்யின் நிர்வாக திறமையின்மை அம்பலம்!**

*இந்நிலையில், தமிழ்நாட்டின் பணவீக்கம் தேசிய சராசரியை மிஞ்சியுள்ளது தெரியவந்துள்ளது. விஜய் அரசின் நிர்வாகத் திறமையின்மையை, ஒன்றிய அரசின் புதிய புள்ளி விவரங்கள் அம்பலப்படுத்தியுள்ளது.*

*ஒன்றிய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் வெளியிட்ட ஆகஸ்ட் மாத நுகர்வோர் விலைக் குறியீட்டு அறிக்கையில், இந்தியாவின் சில்லறை பணவீக்கம் 4. 82 சதவீதமாக பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*ஆனால், தமிழ்நாட்டில் 5.92 சதவீதமாக பணவீக்கம் உள்ளது. இதன்படி, தேசிய சராசரியைவிட தமிழ்நாட்டில் பணவீக்கம்1.10 சதவீதப் புள்ளிகள் அதிகமாக பதிவாகியுள்ளது.*

*தமிழ்நாட்டில் கடந்த ஜனவரியில் 3.36 சதவீதமாக இருந்த பணவீக்கம் த.வெ.க. ஆட்சிக்கு வந்தபின்பு, ஜூன் மாதம் 5.24 சதவீதம், ஜூலை மாதம் 5.44 சதவீதம், ஆகஸ்ட் மாதம் 5.92 சதவீதம் என அதிகரித்துள்ளது.*

*தமிழ்நாட்டில் உணவு பணவீக்கம் 2.56 சதவீதம் அதிகரித்துள்ளது. இது தேசிய சராசரியான 4.82 சதவீதத்தை விட அதிகமாகும்.*

**உணவுகளின் விலை மேலும் உயரும் அபாயம்!**

*உணவு பணவீக்கத்தில் இந்தியாவிலேயே 2வது இடத்தில் தமிழ்நாடு உள்ளது.*

*தமிழ்நாட்டில் அரிசி, பருப்பு, சர்க்கரை, சமையல் எண்ணெய், வெங்காயம் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால், ஏழை, எளிய மக்களும் நடுத்தர வர்க்கத்தினரும் கடும் இன்னல்களை சந்தித்து வருகின்றனர்.*

---

### தமிழ்நாடு முழுவதும் நீடிக்கும் தொடர் மின்வெட்டு: ‘டம்மி’

## த.வெ.க. அரசின் நிர்வாகத் தோல்வியை அப்பட்டமாகக் காட்டுகிறது!

### தி.மு.கழகம் கண்டனம்!

சென்னை, செப். 19–

தமிழ்நாடு முழுவதும் நீடிக்கும் தொடர் மின்வெட்டைச் சரிசெய்ய வக்கில்லாத இந்த டம்மி த.வெ.க. அரசு, மக்கள் மீது பழிபோட்டுத் தப்பிக்க முயல்வது அதன் நிர்வாகத் தோல்வியையே அப்பட்டமாகக் காட்டுகிறது என்று தி.மு.க. கண்டனம் தெரிவித்துள்ளது.

தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், தமிழ்நாட்டில் தொடர் மின்வெட்டு கடுமையாக அதிகரித்து வரும் நிலையில், மக்கள் தங்களது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் அவதிப்பட்டு வீதிகளில் இறங்கிப் போராடும் சூழல் ஏற்பட்டுள்ளது என்று குற்றஞ் சாட்டியுள்ளது.

ஆனால், இந்த விவகாரத்தில் உண்மையான நிலையை உணர்ந்து நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, பாத்ரூம் அமைச்சர் நிர்மல்குமாரும், முந்திரி கொட்டை அமைச்சர் ரமேஷும் மின்வெட்டு எல்லாம் இல்லை. மக்கள் வீண் வதந்தி பரப்புகின்றனர் என்கிறார்கள் என்றும் ஆனால் மாநிலம் முழுவதும் எங்கும் நீடிக்கும் இந்தத் தொடர் மின்வெட்டைச் சரிசெய்ய வக்கில்லாத இந்த டம்மி அரசு, மக்கள் மீது பழிபோட்டுத் தப்பிக்க முயல்வது அதன் நிர்வாகத் தோல்வியையே அப்பட்டமாகக் காட்டுகிறது என்றும் தி.மு.க. கடுமையாக விமர்சித்துள்ளது.

“இதுதான் மாற்றமா? என்று மக்கள் வீதிகளில் ஒன்றுதிரண்டு கேள்வி எழுப்பி போராடி வரும் இந்த அவலநிலை, தற்போதைய ஆட்சியின் இயலாமையை நாட்டுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது என்றும் தி.மு.க. ஐ.டி. விங் கடுமையாக சாடியுள்ளது.

மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றான தடையற்ற மின்சாரத்தை வழங்கத் திராணியில்லாத இந்த மானம்கெட்ட அரசு, இனியாவது தனது தப்பிக்கும் போக்குக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள தி.மு.க. ஐ.டி. விங், மக்களின் கோபமும் எதிர்ப்பும் வலுத்து வரும் நிலையில், இனியும் வீண் பச்சாதாபப் பேச்சுகளைப் பேசாமல், உடனடியாக மின்வெட்டுப் பிரச்சினையை முழுமையாகத் தீர்க்கப் பாருங்கள் என்றும் குறிப்பிட்டுள்ளது.